www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் இடைப் பருவத்தேர்வு - 2022

11 - ஆம் வகுப்பு **கணிதம்**

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 45

## பகுதி - I

I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. 10 X 1 = 10

1. A = {(x, y); y = $e^x$, x ∈ R) மற்றும் B = {(x, y); y = $e^{-x}$, x ∈ R) எனில் n (A ∩ B) என்பது
அ) ∞ ஆ) 0 இ) 1 ஈ) 2

2. n [(A X B) ∩ (A X C)] = 8 மற்றும் n(B ∩ C) = 2 எனில் n(A) என்பது
அ) 6 ஆ) 4 இ) 8 ஈ) 16

3. 3 உறுப்புகள் கொண்ட கணத்தின் மீதான தொடர்புகளின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 81 இ) 512 ஈ) 1024

4. x = {1,2,3,4} மற்றும்
R = {(1,1), (1, 2), (1, 3), (2, 2), (3, 3), (2, 1) (3, 1), (1, 4), (4, 1)} எனில் R
அ) தற்சுட்டுத் தொடர் ஆ) சமச்சீர்தொடர் இ) கடப்புத் தொடர்பு ஈ) சமானத் தொடர்பு

5. f : [0, 2π] → [-1, 1] என்ற சார்பு f(x) = sin x என வரையறுக்கப்படுகிறது எனில் அது
அ) ஒன்றுக்கொன்று ஆ) மேற்கோர்த்தல் இ) இருபுறச் சார்பு ஈ) வரையறுக்க இயலாது

6. ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்புகளைக் கொண்ட கணம் X ன் மீதான அனைத்துத் தொடர்பு R எனில் R என்பது
அ) தற்சுட்டுத் தொடர்பு அல்ல ஆ) சமச்சீர் தொடர்பு அல்ல
இ) கடப்புத் தொடர்பு ஈ) இவற்றுள் எதுவுமன்று

7. |x + 2| ≤ 9 எனில் x அமையும் இடைவெளி
அ) (-∞, -7) ஆ) [-11, 7] இ) (-∞, -7] ∪ [11, ∞) ஈ) (-11, 7)

8. $x^2$ + |x -1| = 1 ன் தீர்வுகளின் எண்ணிக்கை
அ) 1 ஆ) 0 இ) 2 ஈ) 3

9. $\frac{kx}{(x+2)(x-1)} = \frac{2}{x+2} + \frac{1}{x-1}$ எனில் K - ன் மதிப்பு
அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 4

10. |x - 3| < - 2 இன் தீர்வு
அ) - 3 ஆ) - 2 இ) 0 ஈ) கிடைக்கப்பெறாது

## பகுதி - II

எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 15 கட்டாய வினா) 3 X 2 = 6

11. கணம் A ஆனது A = {x : x = 4n+1, 2 ≤ n ≤ 5 n ∈ N} எனில் A ன் உட்கணங்களின் எண்ணிக்கையைக் காண்க.

12. சென்னையில் உள்ள மக்களின் கணத்தில் 'நட்பு' ஒரு சமானத் தொடர்பன்று என்பதை நிரூபிக்க.

13. நிலைக்குத்துக் கோட்டுச் சோதனையின் பயன் என்ன?

14. தீர்க்க. |x - 9| < 2.

15. 7 மற்றும் - 3 ஆகிய மூலங்களையுடைய இருபடிச் சமன்பாட்டைக் காண்க.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

## பகுதி - III

எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி. (வினா எண். 20 கட்டாய வினா) 3 X 3 = 9

16. A = {1, 2, 3, 4} மற்றும் B = {3, 4, 5, 6} எனில் n ((A ∪ B) X (A ∩ B) X (A Δ B) ஐ காண்க.

17. தொடர்புகளின் வகைகளை விளக்குக.

18. $x^2 + \sqrt{2}x + 3 = 0$ என்ற இருபடிச் சமன்பாட்டின் மூலங்கள் $\alpha$ மற்றும் $\beta$ எனில் பூச்சியங்கள் $\frac{1}{\alpha}$ மற்றும் $\frac{1}{\beta}$ உடைய இருபடிக் கோவையைக் காண்க.

19. A என்ற பெண் 446 பக்கங்களைக் கொண்ட ஒரு புத்தகத்தில் 271 பக்கங்களைப் படித்து முடித்து விட்டாள். அவள் அப்புத்தகத்தை ஒரு வாரத்தில் படித்து முடிக்க வேண்டுமெனில் ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் எத்தனை பக்கங்களை படிக்க வேண்டும்.

20. $f(x) = \frac{1}{1-2\cos x}$ என் சார்பகத்தைக் காண்க.

Greentamil.in

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 4 X 5 = 20

21. அ) மக்கள் தொகை 5000 உள்ள ஒரு நகரத்தில் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் மொழி A தெரிந்தவர்கள் 45%, மொழி B தெரிந்தவர்கள் 25%, மொழி C தெரிந்தவர்கள் 10%, A மற்றும் B மொழிகள் தெரிந்தவர்கள் 5%, B மற்றும் C மொழிகள் தெரிந்தவர்கள் 4%, A மற்றும் C மொழிகள் தெரிந்தவர்கள் 4% ஆகும். இதில் மூன்று மொழிகளையும் தெரிந்தவர்கள் 3% எனில், மொழி A மட்டும் தெரிந்தவர்கள் எத்தனை பேர்? *(அல்லது)*

ஆ) தீர்க்க $\frac{x+1}{x+3} < 3$.

22. அ) A = {a, b, c} மற்றும் R = {(a, a), (b, b), (a, c)} என்க. தொடர்பு R ஐ i) தற்சுட்டு ii) சமச்சீர் iii) கடப்பு iv) சமானத் தொடர்பு என உருவாக்க R உடன் சேர்க்க வேண்டிய குறைந்த பட்ச உறுப்புகளை எழுதுக. *(அல்லது)*

ஆ) $x^2 + |x - 1| = 1$ இன் தீர்வுகளின் எண்ணிக்கையைக் காண்க.

23. அ) $f : R \rightarrow R$ என்ற சார்பு $f(x) = 2x - 3$ என வரையறுக்கப்படின் f ஒரு இருபுறச் சார்பு என நிரூபித்து அதன் நேர்மாறினைக் காண்க. *(அல்லது)*

ஆ) $2|x + 1| - 6 < 7$ க்குத் தீர்வு கண்டு தீர்வை எண்கோட்டில் குறிக்க.

24. கீழ்கண்ட வளைவரைகளை வரைக.

i) $y = x^3$ ii) $y = -x^3$ iii) $y = x^3 + 1$ iv) $y = x^3 - 1$ v) $y = (x + 1)^3$ *(அல்லது)*

ஆ) பகுதிப் பின்னங்களாகப் பிரிக்கவும் :



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com